செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 245 நாள்: 23/4/18

# செய்தி குறிப்பு

## மின்னாற்றல் தணிக்கை மற்றும் மின்னாற்றலை சேமிக்கும் திட்டம்(PEACE)

தொழில் நிறுவனங்கள், தங்கள் நிறுவனங்கள் மின்னாற்றல் தணிக்கை மற்றும் மின்னாற்றலை சேமிக்கும் புதிய திட்டம் ஒன்றை தமிழக அரசு துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்கள் மின்னாற்றல் தணிக்கைக்கு ஆகும் செலவில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.75000/- வரை தமிழக அரசு மான்யமாக வழங்கும். இத்திட்டத்தின் நோக்கமானது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மின்னாற்றல் தணிக்கை செய்து அதன் பரிந்துரைகளை செயல்படுத்தி மின் நுகர்வை குறைத்து மின்னாற்றல் செலவு மற்றும் மின் கட்டணத்தை குறைப்பதாகும். மின்னாற்றல் தணிக்கை பரிந்துரையின் அடிப்படையில் தொழில் நிறுவனங்கள் மின்னாற்றலை சேமிப்பதற்கான தொழில் நுட்பங்களை பெறுவதற்கும் மின்னாற்றலை சேமிப்பதற்கான உபகரணங்கள் அமைப்பதற்கான 25% மான்யமும் அதற்கான செலவினங்களுக்காக அதிகபட்சமாக ரூ.2,50,000/- நிதி உதவி வழங்கப்படும்.

எனவே, மாவட்ட தொழில் மையத்தின் திட்டங்களை பயன்படுத்தி வேலையற்ற இளைஞர்கள், புதிய தொழில் முனைவோர்கள், சுய தொழில் ஆர்வமுள்ள இளைஞர்கள், மகளிர்கள் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி கொள்ளவும் தற்போது இயங்கி வரும் தொழில் நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தை விரிவாக்கி வேலூர் மாவட்டத்தை தொழில் துறையில் முதன்மை மாவட்டமாக்க மாவட்ட தொழில் மையத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுகொண்டுள்ளார்.

செ.மி.தொ.அ.
வேலூர்– 9.